# பேசும் குகை

TAM207B



படம் 1



**கதைகூறல்**: (மேலே உள்ள படத்தைக் காட்டி), ஒரு காட்டில் ஒரு சிங்கம் மிகுந்த பசியோடு இருந்தது. அதற்கு ஏதாவது உணவு கிடைக்குமா என்று காடு முழுவதும் தேடி அலைந்தது.

படம் 2



1. சிங்கம் எதைப் பார்க்கிறது?
2. குகைக்குள் என்ன இருக்கும் என்று நினைக்கிறது?
3. சிங்கம் என்ன செய்கிறது?

கரும்பலகையில்:

ஒரு குகையைப் பார்த்தது.

குகைக்குள் ஏதேனும் உணவு கிடைக்கும் என்று நினைத்து உள்ளே சென்றது



படம் 3

1. குகைக்கு அருகில் இருப்பது யார்?
2. அது எதைப் பார்க்கிறது?
3. இது யாருடைய குகையாக இருக்கும்?
4. நரி எங்கே சென்றுவிட்டு வருகிறது?
5. குகைக்கு வெளியே, தரையில் நரி எதைப் பார்க்கிறது?

கரும்பலகையில்:

நரி உணவு சாப்பிட்டு விட்டு தன் குகைக்குத் திரும்பி வந்தது

தரையில் சிங்கத்தின் கால்தடத்தைப் பார்த்தது



படம் 4

1. கால்தடத்தைப் பார்த்ததும் நரி என்ன நினைத்தது?
2. நரி குகைக்குள் சென்றால் என்ன ஆகும்?

கரும்பலகையில்:

ஒரு சிங்கம் குகைக்கு உள்ளே இருக்கிறது
நான் உள்ளே சென்றால் என்னை சாப்பிட்டு விடும்



படம் 5

1. நரி என்ன செய்தது?
2. நரி என்ன சொல்கிறது? யாரிடம்?
3. அதற்கு ஏதேனும் பதில் கிடைத்ததா?
4. பேசாமல் இருந்த குகையிடம் நரி என்ன சொன்னது?

கரும்பலகையில்:

நரி யோசித்து விட்டு, குகையிடம், “வணக்கம் நண்பா” என்றது.

பேசாமல் இருந்த குகையிடம், “இன்று ஏன் என்னிடம் பேசவில்லை?” என்று கேட்டது


இந்த குகை
பேசுமா!!!
வணக்கம் நண்டா!
படம் 6

1. நரி பேசியதைக் கேட்ட சிங்கம் என்ன நினைத்தது?

2. அது என்ன சொல்லியது?

கரும்பலகையில்:

இது பேசும் குகை என்று நினைத்து சிங்கம், “வணக்கம்” என்று கூறியது.


படம் 7
எந்த குகையாவது
பேசுமா???

1. சிங்கம் பேசியவுடன் நரி என்ன சொல்லியது? என்ன செய்தது?

கரும்பலகையில்:

“எந்த குகையாவது பேசுமா?” என்று கூறிவிட்டு ஓடி விட்டது.